மூத்த குடிமக்கள் பங்கேற்ற

முதற்கட்ட ஆடிமாத ஆன்மிகப் பயணம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 20- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2024-2025 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.07.2024) சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் ஆடிமாத அம்மன் திருக்கோயில்களுக்கான முதற்கட்ட கட்டணமில்லா ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்ற 52 மூத்த குடிமக்களுக்கு பயணவழிப் பைகளை வழங்கி, நான்கு வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ஆன்மிகப் பயணமாக சென்று இறையருள் பெற நினைக்கின்ற மூத்த குடிமக்களுக்கு உதவி புரிகின்ற வகையில் பல்வேறு புதிய திட்டங்களை இந்து சமய அறநிலையத்துறை செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில் ஏற்கனவே மானசரோவர் புனிதப் பயணம் செல்வதற்கு வழங்கப்பட்ட அரசு மானியம் ரூ. 40,000/ ஐ ரூ.50,000/ ஆகவும், முக்திநாத் செல்வதற்கு அரசு மானியம் ரூ.10,000/ ஐ ரூ.20,000/ ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. இராமேசுவரத்திலிருந்து காசிக்கு ஆன்மிகப் பயணமாக இரண்டாண்டுகளில் ரூ.1.25 கோடி அரசு மானியத்தில் 500 மூத்த குடிமக்கள் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

அதேபோல் அறுபடை வீடுகளுக்கு 5 கட்டங்களாக 1,000 மூத்த குடிமக்களை கட்டணமில்லாமல் அழைத்துச் செல்ல முடிவெடுத்து இதுவரை மூன்று கட்டங்களில் 609 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். நான்காவது கட்ட ஆன்மிகப் பயணம் ஆகஸ்ட் 7 அன்று சுவாமிலையில் தொடங்கப்பட உள்ளது. இந்த ஆன்மிகப் பயணத்திற்கு அரசு ரூ.1.58 கோடியை மானியமாக வழங்கியுள்ளது. மேலும், இந்தாண்டும் அறுபடை வீடுகளுக்கு 1,000 மூத்த குடிமக்கள் அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இந்த அரசு பொறுப்பேற்றபின் 48 முதுநிலைத் திருக்கோயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கும், மூத்த குடிமக்களுக்கும் சிறப்பு தரிசனம் கிடைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இன்று தொடங்கப்பட்டுள்ள ஆடிமாத அம்மன் திருக்கோயில்களுக்கான முதற்கட்ட ஆன்மிகப் பயணத்தில் தமிழ்நாட்டில் 6 மண்டலங்களில் 250 மூத்த குடிமக்கள் பயன்பெறுகின்றனர். சென்னையில் மட்டும் 52 நபர்கள் பங்கேற்கின்றனர். இவர்களுக்கு சிறப்பு தரிசனத்துடன் உணவு, பயணவழிப் பை மற்றும் அந்தந்த திருக்கோயில் பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன. அதேபோல புரட்டாசி மாதத்தில் வேணவ திருக்கோயில்களுக்கு 1,000 மூத்த குடிமக்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர். இதற்காக அரசு ரூ.50 இலட்சத்தை மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரையில் 1,921 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இந்தாண்டு இறுதிக்குள் 2,000 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தி முடிப்பதற்குண்டான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.6,072 கோடி மதிப்பிலான ஆக்கிரமிக்கப்பட்ட 6,574 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இன்றைய தினம் ஆன்மிகப் பயணம் செல்கின்ற அனைத்து மூத்த குடிமக்களுக்கும் இறையருள் கிடைக்க இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடானது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் கூட்ட முடிவுகளின்படி, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடானது பழனியில் ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் அறுபடை வீடுகளின் காட்சியரங்கம், புகைப்பட கண்காட்சி, 3D தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியரங்கம் போன்றவை அமைக்கப்படுவதோடு, சிறப்பு மலர் மற்றும் ஆய்வுக் கட்டுரை மலர்கள் வெளியிடப்படுகின்றன. முருகப் பெருமானின் சிறப்பு பாடல் ஒன்று 3D தொழில்நுட்பத்தில் பார்க்கும் வகையில் ஏற்பாடுகள் நடைபெற்ற வருகின்றன. மாநாட்டின் இரண்டு நாட்களும் கலந்துக் கொள்கின்ற சுமார் 50,000 க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு உணவு வழங்கப்பட உள்ளது. இம்மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், ஆன்மிகப் பெரியோர்கள் உயர்நீதி மன்ற நீதியரசர்கள், முன்னாள் நீதியரசர்கள், சான்றோர் பெருமக்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இதுவரையில் தமிழகத்தில் நடைபெற்ற ஆன்மிகம் சார்ந்த மாநாட்டில் இந்த மாநாடு தான் மிகப்பெரிய மாநாடாக இருக்கும், அந்த வரலாற்றையும் படைக்கப் போகின்றவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியானது சட்டத்தின்படி நடைபெறும் ஆட்சியாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமம். தவறு யார் செய்திருந்தாலும் எப்பேர்பட்ட உயர்ந்த பதவியில் இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது. தவறு செய்தவர்கள் மீது இன்னார் இனியவர் என்று பார்க்காமல் கடுமையான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகின்றார். இதை அனைத்து ஊடகங்களும் பல்வேறு அரசியல் கட்சியினரும் பாராட்டி வருகின்றனர் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் ஆர்.சுகுமார், இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை, திருமதி பெ.க.கவெனிதா, திருக்கோயில் அறங்காவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், நஞ்சநாடு ஊராட்சி, போர்த்தியாடா பகுதியில் தென்மேற்கு பருவ மழையினால் சேதமடைந்த வீடுகள் அமைந்துள்ள பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (19.07.2024) நேரில் பார்வையிட்டு, பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் உட்பட பலர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்குப் பருவ மழையினால் மண்சரிவு ஏற்பட்ட

குட்டிமணிநகர் - வீடு சேதமடைந்த நஞ்சநாடு பகுதிகளில் ஆய்வு!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் மேற்கொண்டார்!

நீலகிரி,ஜூலை.20- நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவ மழையினால் மண்சரிவு ஏற்பட்ட உதகை ஊராட்சி ஒன்றியம், முள்ளிகூர் ஊராட்சி, குட்டிமணிநகர் பகுதியினையும், வீடு சேதமடைந்த நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட போர்த்தியாடா, மொட்டோரை ஆகிய பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (19.07.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, 3 குடும்பங்களுக்கு தனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.4,000 நிவாரணத் தொகையினை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் ஆலோசனையின்படியும், மாவட்ட நிர்வாகம் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தென்மேற்கு பருவமழை தீவிரத்தின் காரணமாக அதிக மழை பெய்து வருகிறது. அதன் காரணமாக பல்வேறு இடங்களில் மண்சரிவு ஏற்படுகிறது. போர்த்தியாடா பகுதியில் மழையின் காரணமாக சேதமடைந்த வீட்டின் உரிமையாளருக்கு ரூ.8,000 நிவாரணம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் எனது சொந்த நிதியிலிருந்து 3 நபர்களுக்கு தலா ரூ.4,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த பகுதிகளுக்கு தேவையான தடுப்புச்சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில், மாவட்டத்தில் 51 வீடுகள் பகுதி சேதமடைந்தும், 3 வீடுகள் முழுமையாக சேதடைந்துள்ளது. 01.06.2024 முதல் தற்போது வரை மழை காரணமாக சேதமடைந்த 54 குடியிருப்புகளுக்கு இழப்பீட்டுத்தொகையாக தலா ரூ.8,000 வீதம் ரூ.4.32 இலட்சம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், கடந்த 4 நாட்களாக நமது மாவட்டத்தில் பெய்த மழை மற்றும் காற்றின் காரணமாக 19 இடங்களில் மண்சரிவும், 52 மரங்களும் விழுந்துள்ளது.

மேலும், நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட துறை அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், 3 மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் ஆகியோர்; குந்தா, கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய பகுதிகளில் தயார் நிலையிலிருந்து, மழை மற்றும் காற்றின் காரணமாக சாலையில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தி, பொதுமக்களுக்கு எவ்வித சிரமமின்றி சீர் செய்து வருகிறார்கள். நேற்றைய தினம் இத்தலார் பகுதியில் தடுப்புச்சுவர் இடிந்த பகுதி வருவாய்த்துறையினருடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இன்றைய தினம் குட்டிமணி நகர், போர்த்தியாடா, மொட்டோரை ஆகிய மழையினால் பாதிக்கப்பட்ட இடங்கள் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து முன்னேற்பாடு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன், வட்டாட்சியர்கள் சரவணகுமார் (உதகை), திருமதி.கலைச்செல்வி (குந்தா), உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அண்ணாதுரை, சலீம், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட பலர் உடனிருந்தனர்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், பெசன்ட் நகர், எலியட்ஸ் கடற்கரையில்

ரூ.1 கோடியே 54 ஆயிரம் மதிப்பில் தூய்மை செய்யும் இயந்திரம்!

சென்னை,ஜூலை.20- பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெசன்ட் நகர், எலியட்ஸ் கடற்கரையில் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ், அரசு மற்றும் தமிழ் மேட்ரிமோனி பங்களிப்புடன் ரூ.1 கோடியே 54 ஆயிரம் மதிப்பில் வாங்கப்பட்ட கடற்கரை தூய்மை செய்யும் இயந்திரத்தின் செயல்பாடுகள் நேற்று (19.07.2024) பெசன்ட் நகர் கடற்கரையில் தொடங்கி தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்கனவே மெரினா கடற்கரையில் 5 இயந்திரங்கள் பெசன்ட் நகர் கடற்கரையில் 2 இயந்திரங்கள் பாலவாக்கம் கடற்கரையில் 1 இயந்திரம் என கடற்கரை தூய்மை செய்யும் 8 இயந்திரங்கள் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், நீர்நிலைகளைப் புனரமைத்தல், விளையாட்டுத் திடல், பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், அடிப்படை வசதிகள் மேம்பாடு, சமுதாய கூடங்கள், பூங்கா மேம்பாடு, தூய்மைப் பணிகளுக்காக பேட்டரியால் இயங்கும் வாகனங்கள், கடற்கரை தூய்மை செய்யும் இயந்திரங்கள், பாப்காட் மற்றும் பிற வாகனங்கள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு பொதுமக்கள், சமூக நல அமைப்புகள், நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் உள்ளிட்டோர் ஒரு பங்கு நிதி அளித்தால், அரசின் சார்பில் கூடுதலாக இரு பங்கு நிதி வழங்கப்பட்டு, மக்கள் பரிந்துரைக்கும் சிறப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், அரசின் சார்பில் ரூ.66.36 இலட்சம் நிதி, தமிழ் மேட்ரிமோனியின் சார்பில் ரூ.34.18 இலட்சம் நிதி என மொத்தம் ரூ.1 கோடியே 54 ஆயிரம் மதிப்பில் வாங்கப்பட்ட கடற்கரை தூய்மை செய்யும் இயந்திரத்தின் செயல்பாடுகள் இன்று தொடங்கி கடற்கரையை தூய்மை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் நமக்கு நாமே திட்டத்தில் அரசு மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.100.97 கோடி மதிப்பில் 613 திட்டப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இதில் ரூ.49.24 கோடி மதிப்பில் 532 திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

தி.மு.க. வழக்கறிஞர் அணி

மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் - சட்டத்துறை மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிக்கை!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட/ மாநகர அமைப்பாளர்கள் மற்றும் சட்டத்துறை மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (21.07.2024) காலை 9.00 மணி அளவில் சென்னை, எழும்பூரில் உள்ள "ஓட்டல் ரமடா"வில், எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கவுரை ஆற்றிட, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர் சிறப்புரை ஆற்றிட, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நிறைவுரையாற்றிட உள்ளனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட/ மாநகர அமைப்பாளர்கள் மற்றும் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.7.2024

என்.ஆர்.இளங்கோ எம்.பி.
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதிகுட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் பெருமாள்பட்டு ஊராட்சியில் ரூ. 28 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 2 கூடுதல் வகுப்பறைகளை காணொளி வாயிலாக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்ததை தொடர்ந்து பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார் உடன் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மோகனா, ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், உதவி தொடக்கக் கல்வி அலுவலர் வீரராகவன் மாவட்ட பிரதிநிதி எஸ்.பரமேஸ்வரன், தலைமை ஆசிரியர் ராமசுப்பிரமணி நிர்வாகிகள் சௌந்தர்ராஜன், ஜெயபுகழேந்தி, கௌரி கஜேந்திரன், எம்.சக்திவேல், உள்பட பலர் உள்ளனர்.

நடப்பு கல்வி ஆண்டுக்கான

யோகா-இயற்கை மருத்துவப்பட்ட மேற்படிப்பு!

விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

சென்னை, ஜூலை 20- தமிழ்நாட்டிலுள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரி, சென்னை மற்றும் சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம், செங்கல்பட்டு கல்லூரிகளில் உள்ள இடங்களுக்கு, 2024-2025 ஆம் கல்வியாண்டிற்கான எம். டி. (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கான சேர்க்கை பெற அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் தகுதியான நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை"WWW.TNHEALTH.TN.GOV.IN" என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் இவ்வியக்குநரகத்திலோ, தேர்வுக் குழு அலுவலகத்திலோ வழங்கப்படமாட்டாது. மேலும், அடிப்படைத்தகுதி, தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு"WWW.TNHEALTH.TN.GOV.IN" என்ற வலைதள முகவரியில் தெரிந்துக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை 21.07.2024 முதல் 05.08.2024 முடிய மாலை 05.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக பெறவோ அல்லது நேரில் சமர்ப்பிக்கவோ கடைசி நாள்: 05.08.2024 மாலை 05.30 மணி வரை.

விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முகவரி: "செயலர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை - 600 106."

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தின் தேர்வுக்குழுவால், நடத்தப்படும் நுழைவு தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே எம். டி. (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கான சேர்க்கை நடைபெறும்.

தற்காலிக நுழைவுத்தேர்வு நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், செயலர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம், சென்னை - 600 106 அவர்களால் WWW.TNHEALTH.TN.GOV.IN" என்ற வலைதள முகவரியின் மூலமாக பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பதாரர்களுக்கு கலந்தாய்வு நேர்முகமாக மட்டுமே நடைபெறும் மேலும் விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே வர வேண்டும்.

கலந்தாய்வு தேதி, இடம் மற்றும் அனைத்து விவரங்களும் வலைதள முகவரி மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும். கலந்தாய்வு அன்று நேரில் வரத்தவறியவர்கள் தங்களது வாய்ப்பை இழந்துவிடுவார்கள்.

விண்ணப்பக் கட்டணம்: 3000/ ரூபாய். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை எஸ்.பி.ஐ. இ-சேவை வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்.

கடைசி தேதிக்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், தபால்/கூரியர் சேவையினால் ஏற்படும் கால தாமதத்திற்கு தேர்வுக்குழு பொறுப்பாகாது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

தஞ்சை கூத்தரசனின் தம்பி மெ.மணியின் மணிவிழா!

சென்னையில் நாளை மாலை நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 20- தி.மு.க. தலைமை இலக்கிய அணியின் புரவலர் தஞ்சை.கூத்தரசனின் தம்பி மெ.மணி - ம.சாந்தி தம்பதியரின் (61வது ஆண்டு பிறந்த நாள் விழா) மணிவிழா நாளை (21.7.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை புரசைவாக்கம் அருகிலுள்ள பெருமாள் பேட்டை இராட்லர் தெருவில் (அவதானம் பாப்பையர் சாலை டவ்டன் மணிகூண்டு ஆகியவற்றின் இடையில் உள்ள தெரு) அமைந்துள்ள எஸ்.ஆர்.மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு தலைமையேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு நடத்தி வைத்து வாழ்த்துரையாற்றுவார்கள் மற்றும் டி.கே.எஸ்.இளங்கோவன், மாம்பலம், ஆ.சந்திர சேகர், அரிமா நா.சந்திரபாபு ஆகியோரும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகளும் வாழ்த்திப் பேசுகின்றனர்.

பேராசிரியர் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கும்மிடிப்பூண்டி தொகுதி கவரைபேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1 கோடியே 88 லட்சம் திட்ட மதிப்பிட்டில் 8 வகுப்பறைகள் கொண்ட பள்ளி கட்டிடத்தை முதல்வர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்த்து மாவட்ட கழக செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் பள்ளி வளாகத்தில் துவக்கி வைத்தார் உடன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.மணிபாலன், பா.செ.குணசேகரன், இரா.அறிவழகன், எஸ்.ராமஜெயம், மு.பாஸ்கரன், நா.செல்வசேகரன், ஜெ.மோகன்பாபு, கே.ஜி.நமச்சிவாயம், கே.இ.திருமலை, அம்பேத்கார் நடராஜன், மோ.பிரசாத், பா.சுரேஷ், கே.வி.நாகராஜ், எம்.மெய்யழகன், கா.பரத்குமார், எம்.அமுல்ராஜ், முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி, தலைமை ஆசிரியர் ஐயப்பன், பொறியாளர் கவிதா பா.அறிவழகன், ஜெயச்சந்திரன், ரவி, அங்குமுத்து, வெங்கடேசன், சாய்சத்யா, கேபிள் பிரகாஷ், கட்டிட ஒப்பந்தகாரர் கஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.